# கடலூர் மாநகராட்சி

**2022ம் ஆண்டு மே மாதம் 20 –ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கீழ்க்கண்ட பொருட்கள் சம்பந்தமாக கடலூர் மாமன்றத்தின் அவசரக் கூட்டம் கடலூர் மாமன்ற கூடத்தில் (Council Hall ) நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

| | |
|---|---|
| மாநகராட்சி அலுவலகம் | மேயர், |
| கடலூர் | கடலூர் மாநகராட்சி. |
| நாள் 18.05.2022 | |

## பொருட்கள்

| | |
|---|---|
| 1) | தமிழக அரசின் அரசாணை எண்.53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் –30.03.2022 கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் சட்டம் 1981 அத்தியாயம் – 5 பிரிவு 118ல் உள்ள விதிகளில் குறிப்பிட்டுள்ள அதிகாரங்களின் கீழும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2022/ஆர்1 நாள்– 01.04.2022ம் தேதிய வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படியும், கடலூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.351 நாள் 11.04.2022ல் 01.04.2022 முதல் கீழ்க்கண்டவாறு அடிப்படை மண்டல மதிப்பீடு உயர்வு செய்து சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி பொருள் தொடர்பாக 30 தினங்களுக்குள் பொது மக்களிடம் இருந்து ஆட்சேபனை மற்றும் கருத்துரு வேண்டி 13.04.2022ம் தேதிய கடலூர் மாவட்ட தினத்தந்தி மற்றும் தின கரன் நாளிதழ்களில் தினசரி பதிப்பில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. |

**சொத்து வரி**

| வ. எண் | மண்டல விபரம் | ஏற்கனவே நிர்ணயம் செய்துள்ள அடிப்படை மதிப்பு ரூ. | குடியிருப்பு கட்டிடங்களுக்கு தற்போது 01.04.2022 முதல் உயர்த்தப்படும் அடிப்படை மதிப்பு ரூ. | | | | வணிக கட்டிடங்கள் ரூ. (2.00 உயர்வு) | கூஷதாழிற் சாலைகள் , சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரிகள் ரூ. (1.75 உயர்வு) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 600 சதுர அடி வரை (1.25 உயர்வு) | 601 – 1200 சதுர அடி வரை (1.50 உயர்வு) | 1201 – 1800 சதுர அடி வரை (1.75 உயர்வு) | 1801 சதுர அடிக்கு மேல் (2.00 உயர்வு) | | |
| 1 | A | 2.05 | 2.56 | 3.08 | 3.59 | 4.10 | 4.10 | 3.59 |
| 2 | B | 1.55 | 1.94 | 2.33 | 2.71 | 3.10 | 3.10 | 2.71 |
| 3 | C | 1.05 | 1.31 | 1.58 | 1.84 | 2.10 | 2.10 | 1.84 |
| 4 | D | 1.00 | 1.25 | 1.50 | 1.75 | 2.00 | 2.00 | 1.75 |

**காலி மனை வரி**

| வ. எண் | மண்டல விபரம் | ஏற்கனவே நிர்ணயம் செய்துள்ள அடிப்படை மதிப்பு ரூ. (பைசா) | 01.04.2022 முதல் நிர்ணயிக்கப்படும் அரையாண்டிற்கான தொகை ரூ. (பைசா) |
|---|---|---|---|
| 1 | A | 0.40 | 0.80 |
| 2 | B | 0.30 | 0.60 |
| 3 | C | 0.20 | 0.40 |

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

மேற்படி விளம்பரம் கடலூர் மாவட்ட தினசரி நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டு 30தினங்கள் கடந்துவிட்ட நிலையில் பொது மக்களிடம் இருந்து யாதொரு ஆட்சேபனை மற்றும் கருத்துக்கள் ஏதும் பெறப்படவில்லை என்பதை மாமன்றத்தில் பதிவு செய்திடவும், உயர்வு செய்யப்பட்ட அடிப்படை மண்டல மதிப்பீட்டினை இறுதி செய்திடவும் அதனை கடலூர் மாவட்ட அரசு இதழில் பிரசுரம் செய்திடவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் கடலூர் மாநகராட்சியில் சொத்து வரி கணக்கீட்டு விகிதாசாரம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டு வருகிறது. தற்போதைய விகிதாசார அடிப்படையிலேயே சொத்து வரி கணக்கீடு செய்திட மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண். | விபரம் | விகிதாச்சார சதவிகிதம் |
|---|---|---|
| 1 | பொது நிதி | 9.625 |
| 2 | குடிநீர் மற்றும் வடிகால் நிதி | 4.625 |
| 3 | கல்வி நிதி | 2.500 |
| 4 | நூலக வரி | 1.425 |
| | மொத்தம் | 18.175 |

மேலும் தற்போது வரை மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் ஆகியவற்றிற்கு கீழ்க்கண்டவாறு மண்டலம் மற்றும் மதிப்பு நிர்ணயம் செய்திடவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | தெரு பெயர் | சொத்து வரி | | காலிமனை வரி | |
|---|---|---|---|---|---|---|
| | | | மண்டலம் | மதிப்பு ரூ. | மண்டலம் | மதிப்பு ரூ. |
| 1 | 6 | கண்ணன் கார்டன் | C | 1.05 | C | 0.20 |
| 2 | 8 | லோகநாதன் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 3 | 8 | P.C.சுப்பரமணியன் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 4 | 9 | சண்முகா நகர் | C | 1.05 | C | 0.20 |
| 5 | 9 | SSR அவென்யூ | C | 1.05 | C | 0.20 |
| 6 | 14 | கணேசன் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 7 | 14 | அம்மன் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 8 | 14 | சிவகலை நகர் விரிவு | C | 1.05 | C | 0.20 |
| 9 | 15 | ரஞ்சன் கோபால் நகர் விரிவு | C | 1.05 | C | 0.20 |
| 10 | 23 | கம்மியம்பேட்டை பைபாஸ் ரோடு | C | 1.05 | C | 0.20 |
| 11 | 29 | ஸ்ரீ மோகன் கார்டன் விரிவு | C | 1.05 | C | 0.20 |
| 12 | 30 | ராம் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 13 | 30 | கண்ணகி நகர் விரிவு | C | 1.05 | C | 0.20 |
| 14 | 33 | தாஜ் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 15 | 33 | தண்டபாணி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 16 | 33 | ஸ்ரீ சக்திவேல் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 17 | 33 | விஸ்வ கர்மா நண்பர்கள் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 18 | 33 | ஓம் முருகா நகர் | C | 1.05 | C | 0.20 |
| 19 | 33 | கணபதி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 20 | 34 | V.I.P கார்டன் | C | 1.05 | C | 0.20 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21 | 34 | மகாலட்சுமி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 22 | 35 | காந்தி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 23 | 35 | லேன்டோனா நகர் | C | 1.05 | C | 0.20 |
| 24 | 35 | வீர ஆஞ்சனேயர் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 25 | 35 | சுனாமி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 26 | 35 | பழைய சுனாமி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 27 | 35 | புதிய சுனாமி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 28 | 35 | சிங்காரவேல் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 29 | 36 | சுனாமி குடியுருப்பு (பனங்காடு காலனி) | C | 1.05 | C | 0.20 |
| 30 | 44 | A.M.K. கார்டன் | C | 1.05 | C | 0.20 |
| 31 | 45 | காந்தி நகர் | C | 1.05 | C | 0.20 |

அ.கு.

அ. 01.04.2022 முதல் சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு தொடர்பான விளம்பரம் 13.04.2022 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு குறித்து ஆட்சேபனை ஏதும் பெறப்பட வில்லை என்பதால் உயர்த்தப்பட்ட அடிப்படை மண்டல மதிப்புகளை மாமன்றம் அனுமதிக்கலாம்.

ஆ. மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் ஆகியவற்றிற்கு மண்டலம் மற்றும் மதிப்பு நிர்ணயம் செய்திடவும் மாமன்ற அனுமதிக்கலாம்.

இ. சொத்து வரி விகிதாச்சாரத்தையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ஈ. மேற்படி சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு தொடர்பான விபரத்தினை கடலூர் மாவட்ட அரசு இதழிலில் பிரசுரம் செய்திடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண்.4727/2022 /அ1

2)

இம்மாநகராட்சி முன்னாள் இளநிலை பொறியாளர் திரு.டி.ஜெயபிரகாஷ் நாராயணன், சென்னை உயர்நீதிமன்றத்தில் தனக்கு கடலூர் மாநகராட்சியிலிருந்து விதிகளை மீறி அரக்கோணம் நகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக ஆணையர், திருமிகு. ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., ஆணையர், கடலூர் மாநகராட்சி மற்றும் திருமதி.எம்.என்..கலைவாணி ,உதவிப் பொறியாளர் ஆகியோர் மீது ரிட் வழக்கு தொடர்ந்து, மேற்படி வழக்கில் நீதிமன்ற உத்தரவுப்படி, அரக்கோணம் நகராட்சிக்கு பணியிட மாற்றம் உத்தரவை ரத்து செய்து, கடலூர் நகராட்சியிலேயே தொடர அனுமதிக்கப்பட்டது.

மேற்படி ரிட் வழக்கு எண் 17217/ 2013 தொடர்பாக, சென்னை 28, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 27.04.2022 ம் தேதிய மின்னஞ்சலில் திரு.பிஎச். அரவிந்த் பாண்டியன் Assistant Advocate General I அவர்கள், மேற்படி வழக்கில் appearance ஆகி வழக்கு பணி பார்க்கப்பட்டதால், உரிய appearance-க்கான தொகை ரூ.15000 x 3 = 45000/– க்கு பட்டியல் வரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| | மேற்படி நீதிமன்ற பணிகள் அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று appearance தொகை ரூ.45000/– வழங்கியது மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |
| அ.கு. | **<u>அலுவலக குறிப்பு</u>** மாமன்றம் அனுமதி வழங்கலாம். |
| 3) | கோயம்புத்துார் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு கடலுார் பெருநகராட்சியின் (சிறப்பு நிலை நகராட்சி ) ஆண்டு பங்களிப்பு தொகை ரூ.1,50,000/– செலுத்தப்பட்டு வரப்படுகிறது. தற்பொழுது அரசாணை எண் 36 (நிலை) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.04.2021ல் அனைத்து நிலை நகராட்சி சிறப்பு நிலை பேரூராட்சி, மாநகராட்சிகளுக்கு அதன் நிலைக்கு ஏற்ப ஆண்டு பங்களிப்பு தொகை உயர்வு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.<br>மேற்படி ஆணையின்படி கடலுார் பெருநகராட்சிக்கு ரூ.1,50,000/–லிருந்து ரூ.200000/– என உயர்வு செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து 31.05.2021 தேதிய நகர்மன்ற தீர்மானம் 40 மூலம் மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.<br>தற்பொழுது கடலுார் சிறப்பு நிலை நகராட்சியிலிருந்து மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால், மாநகராட்சியின் கோவை நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு ஆண்டு சந்தா மேற்படி அரசாணைப்படி ரூ.3,00,000/– செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கும், பதிவிற்காகவும். |
| அ.கு. | 1) மாமன்றம் பதிவு செய்யலாம்<br>2) 01.04.2021 நிதியாண்டு முதல் மாநகராட்சிக்கு உயர்த்தப்பட்ட தொகை ரூ.3,00,000/– பொது நிதியிலிருந்து செலுத்தலாம். |
| 4) | கடலுார் மாநகராட்சிக்கு சொந்தமான பாபு கலையரங்கத்திலுள்ள நுண்ணுயிர் மையத்தில் பழைய கழிவடைந்த பயன்படுத்த இயலாத நிலையிலுள்ள இரும்பு குப்பைத் தொட்டிகள், பழைய தள்ளுவண்டிகள் (ம) இதர இரும்பு பொருட்கள் நீண்ட நாட்களாக சிதிலம் அடைந்த நிலையில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது மேற்காணும் பழுதடைந்த உபயோகமற்ற நிலையில் உள்ள இரும்பு பொருட்களை மேலும் பாதுகாத்து வைப்பதால் எந்தவித பயனுமின்றி துருப்பிடித்து வீணாகி வருவதுடன் பொது சுகாதாரத்திற்கும் பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட உபயோகமற்ற பொருட்களை மதிப்பீடு செய்து பொது ஏலம் விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 5) | கடலுார் மாநகராட்சியில் பொது சுகாதார பிரிவில் அனுமதிக்கப்பட்ட 22 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் பணியிடத்தில் காலியாக உள்ள 14 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் பணியிடத்தினை நிரப்பிக் கொள்ள அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.3128/2020/எச்1, நாள்:14.08.2020ல் கருத்துரு சமர்பிக்கப்பட்டதில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது ந.க.எண்.21545/2020–1/ஜே2, நாள் 26.11.2021ம் தேதிய செயல்முறை கடிதத்தில் 06 துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடங்களை மட்டும் நிரப்பிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களது செயல்முறை ஆணையின்படி இம்மாநகராட்சியில் தகுதி வாய்ந்த 06 |

| | |
|---|---|
| | தூய்மை பணியாளர்களைக் கொண்டு பதவி உயர்வின் மூலம் துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.<br><br>இம்மாநகராட்சியானது 45 வார்டுகளுடன் 27.69 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 11 துப்புரவு பணி கோட்டங்கள் அமைந்துள்ளது. இம்மாநகராட்சிக்கென அனும்திக்கப்பட்ட தூய்மை பணியாளர்கள் 456ல் ஓய்வு மற்றும் இறப்பின் காரணமாக காலியிடங்கள் ஏற்பட்டு 191 நிரந்தர தூய்மை பணியாளர்களும், வெளிக்கொணர்வு முகமையின் மூலம் 157 தூய்மை பணியாளர்களும் ஆக மொத்தம் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான 348 தூய்மை பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மக்கள் தொகையானது 1,98,987 ஆக அதிகரித்தும் இம்மாநகராட்சியானது மாவட்ட தலைநகரமாகவும், துறைமுக நகரமாகவும் இருப்பதால் இம்மாநகராட்சிக்கு தினசரி வந்து செல்லும் மக்கள் தொகை நெருக்கம், காரணமாகவும், அன்றாட தூய்மைப்பணிகளை கண்காணிக்க மிகவும் சிரமமாக உள்ளது. இம்மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட 22 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் பணியிடத்தில் ஏற்கனவே பணியில் உள்ள 8 தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறையின்படி பூர்த்தி செய்யப்பட்ட 6 தூய்மைப்பணி மேற்பார்வையாளர் பணியாளர்களை சேர்த்து மொத்தம் 14 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். எனவே இம்மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடம் 22ல் தற்போது 8 பணியிடங்கள் காலியாக உள்ளது.<br>கடலூர் பெருநகராட்சியானது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில், நகரம் வளர்ச்சியடைந்தும், மக்கள் தொகை அதிகரித்து வருவதன் காரணமாகவும், திடக்கழிவு மேலாண்மை மற்றும் அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் பொது சுகாதார பிரிவு பணிகளை கண்காணிக்க போதிய துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் இல்லாததால், இம்மாநகராட்சியில் காலியாக உள்ள 8 துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடங்களுக்கு தற்போது உள்ள தூய்மை பணியாளர்களில் தகுதியானவர்களைக் கொண்டு 8 துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடங்கள் நிரப்பிக் கொள்ள அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி கோரப்படுகிறது. |
| **அ.கு.** | மாமன்றம் அனுமதிக்கலாம். **(கோப்பு எண்.3128/ 2018 /எச்1)** |
| **6)** | கடலூர் மாநகராட்சி 2022 – 2023ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் டோனர்கள் வாங்க உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் 06.04.2022ம் தேதியன்று வரப்பெற்ற நான்கு நிறுவனங்களின் வரப்பெற்ற ஒப்புந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |

| தேவைப்படும் பொருட்களின் விவரம் | எண்ணிக் கை | Yuvathi System, Cuddalore | Ramanath apuram Sistrict Printers Service Industrial Co-op Society Ltd., Ramana thapuram | Yadav IT Solutions, Puducherry | New Version, Pucher ry |
|---|---|---|---|---|---|
| A4 White Sheet 80GSM TNPL | 1 | 313.60 | 324.80 | 560 | 616 |
| Toner 12A HP Printer | 1 | 6372 | 6431 | 6372 | 7080 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Toner 56A HP Printer | 1 | 3363 | 3481 | 6785 | 7375 |
| Epson LX310 Printer | 1 | 590 | - | 885 | 767 |
| Toner Brother Printer TN2365 | 1 | 4720 | 4838 | 7080 | 7552 |

மேற்கண்ட வரப்பெற்ற நான்கு ஒப்புநோக்குப் பட்டியலின்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த Yuvathi System, Cuddalore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்கவும், விநியோக உத்திரவு வழங்கவும், அதற்கான தோராயச் செலவினத்தொகை ரூ.3,10,000/–த்தை மாநகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவு மேற்க்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.**

அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி மாநகர மேயர் அவர்கள் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கியதற்கு மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம். <u>ந.க.எண். 5747/2020/எச்2</u>

**7)**

சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.28093/2021 வழக்கில் ஸ்ரீமுஷ்ணம் ஆதிவரக நல்லூர் கிராமத்தில் கடலூர் மாநகராட்சியிலிருந்து திடக்கழிவுகளை கொண்டு சென்று கொட்டி வருவதாக தெரிவித்து மாநகராட்சி ஆணையாளரை 2 எதிர்வாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ள பகுதிக்கும் கடலூர் மாநகராட்சிக்கும் இடைப்பட்ட தூரம் 70 கி.மீ ஆகும். மேலும் கடலூர் மாநகராட்சியில் சேகரமாகும் குப்பைகளை கொண்டு சென்று கொட்டுவதில்லை என்பதையும் மாநகராட்சியில் சேகரமாகும் கழிவுகளை முறையாக நுண்உர மையங்களில் உரமாக்குவதுடன் மாநகராட்சி எல்லைக்குள் சேகரமாகும் குப்பைகள் முறையாக அப்புறப்படுத்தப்பட்ட வருகிறது என்ற விவரத்தினை இவ்வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு வரும் பொழுது ஆஜராகி தெரிவித்திட திரு.குருநாதன் கூடுதல் அரசு வழக்கறிஞர், அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட வழக்கில் ஆஜராகி இவ்வழக்கிற்கும் மாநகராட்சி ஆணையாளருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என தெரிவித்து இவ்வழக்கு நீக்கம் செய்யப்பட்டது. மேற்கண்ட வழக்கில் ஆஜராகி நடத்திட்டதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.20,000/– வழங்க கோரி கடிதம் அளித்துள்ளார். எனவே திரு.குருநாதன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.20,000/– வழங்கவும், அதற்கான செலவினத் தொகை இம்மாநகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.**

அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டதை அனுமதிக்கலாம். கோ.எண்:13064/2021 /எப்2

**8)**

கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3 வரிவிதிப்பு எண் 093/ 003/ 00958 கிருஷ்ணசாமி நினைவு மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, கல்வி நிறுவனத்திற்கு சொத்துவரி நிர்ணயம் செய்ததை ஆட்சேபித்து, சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் ... என்ற எண்ணில் ஸ்ரீ சுப்புலட்சுமி கிருஷ்ணசாமி ரெட்டியார் கல்வி அறக்கட்டளை, நிறுவனர் டாக்டர் கே.ராஜேந்திரன், த/பெ.கிருஷ்ணசாமி என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார்.

| | |
|---|---|
| | மேற்படி வழக்கில் கடலூர் மாநகராட்சி சார்பாக திரு.எஸ்.ரவிச்சந்திரன், கூடுதல் அரசு வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம் அவர்கள் ஆஜராகி வழக்கினை நடத்திடவும் வழக்கிற்கான செலவினம் ரூ.15,000/— வருவாய் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். ( 4983/ 2022/ அ4) |
| 9) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் உந்து நிலையம் மற்றும் சேகரிப்பு நிலையங்களில் உள்ள பழுதடைந்த மோட்டார்களை பழுது நீக்கம் செய்யும் பணி ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், மின் மோட்டார்களை Aish Technology Private Ltd., Ambathur, Chennai என்ற நிறுவனத்திற்கு அனுப்பி பழுது நீக்கம் செய்ய விலை விகிதம் பெற்று மேல் நடவடிக்கை தொடர மாமன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 2323 /2016/இ3) |
| 10) | கடலூர் மாநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கும் கீழ்கண்ட விவரப்படி உள்ள வாகனங்களுக்கு 01.04.2022 முதல் 31.03.2023 வரை சாலை வரி செலுத்தப்பட வேண்டியுள்ளது. |

| வ. எண் | வாகன எண் | சாலை வரி |
|---|---|---|
| 1. | TN31B 4838<br>குடிநீர் லாரி (சாலை வரி, பசுமை வரி) | 11,151- |
| 2. | TN AH 1885<br>ஜெட்ராடிங் லாரி (சாலை வரி, பசுமை வரி) | 13,999- |
| 3. | TN 31 CB 5812<br>ஜெட்ராடிங் லாரி (சாலை வரி, பசுமை வரி) | 8,000- |
| | ஆன்லைன் கட்டணம் | 300- |
| | **மொத்தம்** | **33,450-** |

| | |
|---|---|
| | மேற்கண்ட தொகையை ரொக்கமாக கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்தவும், இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசரம் கருதி மேயர், கடலூர் மாநகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.4379/2022/இ2) |
| 11) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட 45 வார்டு பகுதிகளில் உள்ள 8570 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளை பராமரிக்கும் பணிக்கு தேவையான பணியாளர்களை விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.24.50 இலட்சம் மதிப்பீட்டில் தொகையில் 31.12.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 04.01.2021 அன்று திருமதி.ஆர். நவநீதம் என்ற ஒப்பந்ததாருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.01.2021 |

| | |
|---|---|
| | முதல் 30.06.2021 வரை பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணி காலம் முடிந்தவுடன் ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி அதே ஒப்பந்தப்பதாரரை கொண்டு ஜுலை 2021 முதல் செப்டம்பர் 2021 வரை மூன்று மாத காலத்திற்கும், அக்டோபர் 2021 முதல் டிசம்பர் 2021 வரை மூன்று மாத காலத்திற்கும், ஜனவரி 2022 முதல் மார்ச் 2022 வரை மூன்று மாத காலத்திற்கும் பணி மேற்கொள்ள காலநீட்டிப்பு செய்து மன்ற அனுமதி பெறப்பட்டு பணி தற்போது வரை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், பணிக்கு ரூ.76.00 இலட்சத்திற்கு பணியாளர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்து உரிய பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி இயக்குநரிடமிருந்து உரிய தெளிவுரை பெறப்படாததால் நிர்வாக நலன் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரமுடியாத காரணத்தினால் மேற்படி, 31.12.2020ல் பெறப்பட்ட அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் திருமதி. நவநீதம் , கடலூர் என்பவருக்கு ஏப்ரல் 2022 முதல் ஜுன் 2022 வரை வரையுள்ள மூன்று மாத காலத்திற்கு ரூ.12.25 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்ய நிர்வாக அனுமதியும், இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசரம் கருதி மேயர், கடலூர் மாநகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.213/2020/இ2) |
| 12) | கடலூர் மாநகராட்சி 27.69 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள, 173636 மக்கள் தொகை கொண்ட மாநகராட்சியாகும். மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் நீர் ஆதாரங்களான சாவடி, கேப்பர்மலை, திருவந்திபுரம் ஆகிய தலைமை நீரேற்று நிலையங்கள் மூலம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மொத்தம் 15.63 MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மாநகராட்சி அளவுகோலின்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கப்பட வேண்டும். ஆனால், தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 90 லிட்டர் குடிநீர் மட்டுமே வழங்க முடிகிறது. மேலும், தற்போது கோடைகாலம் வருவதால் நீராதாரங்களான ஆழ்துளை கிணறுகளில் நீர் மட்டம் குறைந்து வருவதால் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.<br>மேலும், 45 வார்டுகளிலும் குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்கப்படாத பகுதிகளான மஞ்சக்குப்பம், புதுப்பாளையம், வண்டிப்பாளையம், முதுநகர் பகுதி மற்றும் குடிநீர் குழாயில் மாசடைந்த பகுதிகளான திருப்பாதிரிப்புலியூர், புதுப்பாளையம், மஞ்சக்குப்பம், சொரக்கல்பட்டு ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்கும் பொருட்டு 45 வார்டுகளுக்கும், 5 எண்ணிக்கை டிராக்டர் மூலம் நாளொன்றுக்கு மூன்று நடைகள் வீதம் மூன்று மாதங்களுக்கு கோடைகால பற்றாக்குறையை போக்கிடவும் பொதுமக்கள் நலன் கருதி வாடகை அடிப்படையில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நெல்லிக்குப்பம் அக்ரோ இன்ஜினியரிங் அண்ட் சர்வீஸ் கோ.ஆப்ரேட்டிவ் சென்டர் லிமிடெட், நிறுவனத்தின் மூலம் குடிநீர் சப்ளை செய்யவும், இப்பணியினை செய்ய மூன்று மாதங்களுக்கு ஆகும் செலவினம் ரூ.40.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசரம் கருதி மேயர், கடலூர் மாநகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று அக்ரோ இன்ஜினியரிங் அண்ட் சர்வீஸ் கோ.ஆப்ரேட்டிவ் சென்டர் லிமிடெட், நெல்லிக்குப்பம் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 8398 /2011/இ2) |

**13)** கடலூர் மாநகராட்சி வார்டு எண்.**38** பனங்காட்டு காலனி பகுதியில் குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த பகுதியில் தெரு விளக்குகளை அமைக்க தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திலிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. இளநிலை பொறியாளர், கடலூர் மாநகராட்சி அவர்களின் குறிப்பின்படி மேற்படி இடத்தில் **10** எண்கள் தெரு விளக்குகள் அமைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே **10** எண்கள் **30**W LED Fittings மற்றும் அதன் பொருத்திகளுக்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**56,000**/- ஐ குடிசை மாற்று வாரியத்திடமிருந்து பெற்று பணி மேற்கொள்ளவும், இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டு மேற்படி, நிதி வரப்பெற்றவுடன் அதனை வருவாய் நிதிக்கு ஈடு செய்துக்கொள்ளவும், பணியின் அவசரம் கருதி மேயர், கடலூர் மாநகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோருவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். /2022/இ2)

**14)** கடலூர் மாநகராட்சி பாதாள சாக்கடை திட்ட பணிக்கு பயன்படுத்தப்படும் TN 31 AH 1885 பதிவெண் கொண்ட ஜெட்ராடிங் லாரியில் உள்ள சிறிய பழுதுகளை நீக்கும் பணிக்கு தோராய செலவினம் ரூ.**49,000/–** ஐ மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதியும் இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசரம் கருதி மேயர், கடலூர் மாநகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோருவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். /2022/இ3)

**15)** கடலூர் மாநகராட்சிக்கு தெரு விளக்குகளை பராமரிக்க மின் உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு ரூ.**9.90** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு **24.03.2022 –**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டு விகிதத்திற்கு** |
|---|---|---|
| **1.** | திருமதி. .R. நவநீதம், கடலூர் | 0.11%(ரூ. 9,78,146.40) மதிப்பீட்டை விட குறைவு. |
| **2.** | மெஸர்ஸ்.மகாலட்சுமி எண்டர்பிரைசஸ், செங்கற்பட்டு | **0.35**%(ரூ. 9,82,682.40) மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் **1**ல் கண்ட திருமதி. R. நவநீதம், கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (**0.11**% ரூ.**9,78,146.40** மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . திருமதி. R. நவநீதம், கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், மேயர், கடலூர் மாநகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** **மா**மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண் / 2022/ இ2)

**16)** கடலூர் மாநகராட்சிக்கு LED Fitting with GI Pipe and Clamp set கொள்முதல் செய்யும் பணிக்கு ரூ.**9.90** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி

| | |
|---|---|
| | பெறப்பட்டது. இப்பணிக்கு 18.04.2022–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திருமதி. .R. நவநீதம், கடலூர் | 0.04%(ரூ. 9,82,195.20) மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | மெஸர்ஸ்.மகாலட்சுமி எண்டர்பிரைசஸ், செங்கற்பட்டு | 0.08%(ரூ. 9,83,382.40) மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திருமதி. R. நவநீதம், கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.04% ரூ.9,82,195.20 மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . திருமதி. R. நவநீதம், கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேயர், கடலூர் மாநகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண் / 2022/ இ2) |
| 17) | கடலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு குளியல் சோப்பு மற்றும் காலணிகள் இருப்பில் இல்லாததால், இம்மாநகராட்சியில் பணிபுரியும் 191 நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 1 குளியல் சோப் வீதம் ஒரு வருடத்திற்கு தேவையான 2300 எண்ணிக்கையிலான குளியல் சோப்பு மற்றும் 1 ஜோடி காலணி வீதம் 200 ஜோடி காலணிகள் தூய்மை பணியாளர்களின் நலன் கருதியும், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும் கொள்முதல் செய்வதற்கும், இதற்கான தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், விலைப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | தூய்மை பணியாளர்கள் நலன் கருதியும், பொது சுகாதாரப் பணியின் அவசியம் கருதியும் மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 18) | கடலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு போதிய அளவு பாதுகாப்பு உபகரணங்கள் இருப்பில் இல்லாததால், கீழ்காணும் பாதுகாப்பு உபகரணங்களை தூய்மை பணியாளர்களின் நலன் கருதியும், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும் கொள்முதல் செய்வதற்கும், இதற்கான தோராய செலவினம் ரூ.8.00 இலட்சத்திற்கு அனுமதியும், மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. தலை கவசம் – 200 எண்ணிக்கை<br>2. ஒளிரும் மேல்சட்டை – 200 “<br>3. ரப்பர் கையுறை – 200 “<br>4. கம்பூட் – 125 “<br>5. பாதுகாப்பு முக கவசம் – 100 “ |

| | |
|---|---|
| | (Dust & Gas filter) |
| அ.கு. | தூய்மை பணியாளர்கள் நலன் கருதியும், பொது சுகாதாரப் பணியின் அவசியம் கருதியும் மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 19) | கடலூர் மாநகராட்சி 2021–2022ம் நிதியாண்டிற்கான சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள் நடப்பு மற்றும் நிலுவைப் பதிவேடுகள் (A4 மற்றும் Legal) நகல் எடுத்திடவும், 2022–2023ன் சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்க்கொள்ளப்பட்டு, வரிவிதிப்புதாரர்களுக்கு சிறப்பு அறிக்கைகள், கணக்கீட்டுதாள்கள், மற்றும் வரி மற்றும் வரியில்லா இனங்களுக்கு கேட்பு அறிவிப்புகள் நகல் எடுத்திடவும், வருவாய் உதவியாளர்களின் கைக்குறிப்பேடு ஆகியவைகளை அச்சடித்து இணைப்பு (பைண்டிங்) செய்ய வேண்டியுள்ளதால் அதற்கான விலைப்புள்ளி 18.04.2022 அன்று கோரப்பட்டது. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது. |

| வ. எண் | பெயர் / விலாசம் | எண்ணிக்கை | A4 Paper Rs. | Legal Paper Rs. | Sprial Binding (1 Book) Rs. |
|---|---|---|---|---|---|
| 1 | மஞ்சு ஜெராக்ஸ்<br>எண்.6, பாபு கலையரங்கம்,<br>பீச் ரோடு, கடலூர் – 1 | 1000 | 850 | 1600 | 50 |
| 2 | நவீன் காப்பியர்ஸ்,<br>எண்.22, நெல்லிக்குப்பம் மெயின் ரோடு,<br>செம்மண்டலம், கடலூர். | 1000 | 1200 | 1800 | 70 |
| 3 | ஜி.ஆர் சொலுசன்ஸ்,<br>எண்.3, 2வது குறுக்கு தெரு, வைத்தியலிங்கபுரம்,<br>கூத்தப்பாக்கம், கடலூர். | 1000 | 1000 | 1700 | 60 |

| | |
|---|---|
| அ.கு. | 1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வரிசை எண்.1 உள்ள குறைந்த விலைப்புள்ளி வழங்கிய மஞ்சு ஜெராக்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம், அதற்கான தோராய செலவினம் ரூ.2.00இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3. பணிமுடிக்கப்பட்டு பட்டியல் பெறப்பட்ட உடன் பட்டியலுக்கு உண்டான தொகையை பொது நிதியில் இருந்து வழங்கலாம். ந.க.எண்.4727/2022/அ1 |
| 20) | அரசாணையின்படி 01.04.2022 முதல் சொத்து வரி, காலிமனைவரிக்கு பொது சீராய்வு செய்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. கடலூர் மாநகராட்சியில் மொத்தம் உள்ள 45 வார்டுகளில் சொத்து வரி – 31755, காலிமனை வரி – 4641 மொத்தம் – 36396 வரி விதிப்புகள் உள்ளன. மேற்படி வரி விதிப்புகளின் விபரங்களை கணினியில் பதிவேற்றம் செய்திடவும், உயர்வு செய்யப்பட்ட தொகையின் விபரத்தினை சிறப்பு அறிக்கையாக பொது மக்களுக்கு வழங்கிட ஏதுவாக நகல் எடுக்கும் பணிகள் உள்ளது. |

| | |
|---|---|
| | மேற்கண்ட பணிகளை குறித்த நேரத்தில் மேற்கொள்ள Data Entry Operator தேவைப்படுகிறது. எனவே, மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப் பட்டுள்ளவாறு (நாள் ஒன்றிற்கு ரூ.565/–) விதம் தினசரி ஊதியத்தின் அடிப்படையில் ஆறு மாதகாலத்திற்கு நியமனம் செய்துக்கொள்ள தோராய செலவினம் ரூ.90,000/– மாமன்றத்தின் அனுமதிக்கும், பணியின் அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரிடவும் மன்றப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது. |
| அ.கு. | 1) மாமன்றம் அனுமதிக்கலாம்,<br>2) மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நாள் ஒன்றிற்கு ரூ.565/–வீதம் பொது நிதியில் இருந்து வழங்கலாம்.<br>ந.க.எண். 4727 /2022/அ1 |
| 21) | கடலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் வாகனம் TN 31 F 9842 டிப்பர் லாரி வாகனத்தின் தகுதிச்சான்று முடிவடைவதால் கீழ்கண்ட பழுது நீக்க பணிகள் மேற்கொள்ள தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற 3 ஒப்பந்தப் புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S.சரவணா ஆட்டோ மொபைல்ஸ், கடலூர் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும், பழுது நீக்கப்பணி மற்றும் தகுதிச்சான்று பெறுவதற்கான மொத்த செலவினத்தொகை ரூ.2,05,000/– (ஒரு இரண்டு லட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.617/ 2022 /எச்2) |
| 22) | கடலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் வாகனம் TN 31 E 0753 Tractor மற்றும் TN 31 AA 7323 Trailer வாகனத்தின் தகுதிச்சான்று 14.06.2022 அன்று முடிவடைவதால் வாகனத்தின் பழுது நீக்க பணிகளை மேற்கொண்டு தகுதிச்சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகளை செய்ய உள்ளூர் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் இருந்து ஒப்பந்தப்புள்ளி கோரவும், பழுது நீக்கப்பணி மற்றும் தகுதிச்சான்று பெறுவதற்கான (வாகனங்கள் வாங்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்த நிலையில் தகுதிச்சான்று புதுப்பிப்பதற்கான கட்டணம் கூடுதலாக RTO அலுவலகத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது) தோராய செலவின தொகை ரூ 2,10,000/– (இரண்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(கோப்பு எண். 5768/ 2022 /எச்1) |
| 23) | கடலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் வாகனம் TN 31 F 8204 Tractor மற்றும் TN 31 F 8163 Trailer வாகனத்தின் தகுதிச்சான்று 15.06.2022 அன்று முடிவடைவதால் வாகனத்தின் பழுது நீக்க பணிகளை மேற்கொண்டு தகுதிச்சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகளை செய்ய |

| | |
|---|---|
| | உள்ளூர் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் இருந்து ஒப்பந்தப்புள்ளி கோரவும், பழுது நீக்கப்பணி மற்றும் தகுதிச்சான்று பெறுவதற்கான (வாகனங்கள் வாங்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்த நிலையில் தகுதிச்சான்று புதுப்பிப்பதற்கான கட்டணம் கூடுதலாக RTO அலுவலகத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது) தோராய செலவின தொகை ரூ 2,20,000/– ( இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(கோப்பு எண். 5769/ 2022 /எச்1) |
| 24) | கடலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் வாகனம் TN 31 F 8183 Tractor மற்றும் TN 31 F 8168 Trailer வாகனத்தின் தகுதிச்சான்று 14.06.2022 அன்று முடிவடைவதால் வாகனத்தின் பழுது நீக்க பணிகளை மேற்கொண்டு தகுதிச்சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகளை செய்ய உள்ளூர் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் இருந்து ஒப்பந்தப்புள்ளி கோரவும், பழுது நீக்கப்பணி மற்றும் தகுதிச்சான்று பெறுவதற்கான (வாகனங்கள் வாங்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்த நிலையில் தகுதிச்சான்று புதுப்பிப்பதற்கான கட்டணம் கூடுதலாக RTO அலுவலகத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது) தோராய செலவின தொகை ரூ 1,95,000/– (ஒரு இலட்சத்து தென்னூற்று ஐந்தாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(கோப்பு எண். 5815/ 2022 /எச்1) |
| 25) | கடலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் வாகனம் TN 31 AA 4948 JCB வாகனத்தின் முன் மற்றும் பின் பக்க டயர்கள் மற்றும் டியூபுகள் பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளதால், புதிய டயர்கள் மற்றும் டியூபுகள் மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் வாங்க காவேரி டயர்ஸ், (MRF tyres exclusive dealers) கடலூர் அவர்களிடம் விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே பொது சுகாதார பிரிவு பணிகள் பாதிப்படைவதால் காவேரி டயர்ஸ், (MRF tyres exclusive dealers) கடலூர் அவர்களுக்கு விநியோக உத்தரவு வழங்கவும், டயர்கள் மற்றும் டியூப்கள் மாற்றம் செய்யவும் அதற்கான செலவின தொகை ரூ.1,35,000/–ஐ (ஒரு லட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(கோப்பு எண். 5940/ 2022 /எச்2) |

| | |
|---|---|
| 26) | கடலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் வாகனம் TN 31 CA 6297 TATA AC வாகனம் பழுது ஏற்பட்டு இயக்கம் இல்லாத நிலையில் உள்ளதால் மற்றும் டயர்கள், டியூபுகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், பழுது நீக்க பணிகள் மேற்கொள்ளவும், புதிய டயர்கள் மற்றும் டியூபுகள் மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகளை செய்ய உள்ளூர் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் இருந்து ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான தோராய செலவின தொகை ரூ 90,000/—ஐ (தொன்னூறு ஆயிரம் மட்டும்) மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(கோப்பு எண். 5917/ 2022 /எச்2) |
| 27) | கடலூர் மாநகராட்சிக்கு வருமான வரித்துறை, பாண்டிச்சேரி துறை அலுவலகம் மூலம் நேரடி ஆய்வு 05.01.2022ல் நடைபெற்றதற்கு, மேற்படி ஆய்வில் 2009—2010 முதல் 2020—2021 வரை வருமான வரி செலுத்திய விவரங்கள் மற்றும் ஆதாரங்கள் மற்றும் நடப்பு ஆண்டு வரை வருமான வரி செலுத்திய விவரங்கள் மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான ஐந்தொகைக் குறிப்பு ஆகியவற்றை ஆய்வு செய்ய ( Trial Balance ) நேரில் நகராட்சி சார்பாக 04.03.2022ம் தேதியில் திரு.எல்.முத்துகிருஷ்ணன், ஆடிட்டர் மூலம் ஆஜராகி சமர்ப்பித்தமைக்கும், அதற்கான கட்டணத் தொகை ரூ.60,000/— வழங்க கோரப்பட்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதி வழங்கலாம். |
| 28) | கடலூர் மாநகராட்சியில் பணி செய்யும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் பணிபுரியும் அலுவலர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரித் தொகை 2021—22ம் ஆண்டிற்கு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு 4 காலாண்டுகளுக்கு E-filing செய்தமைக்கு நகராட்சி சார்பில் செய்த திரு.எல்.முத்துக்குமார், ஆடிட்டர் என்பவருக்கு E-filing செய்தமைக்கான கட்டணத் தொகை ரூ.60,000/— வழங்க கோரப்பட்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து வழங்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதி வழங்கலாம். |
| 29) | கடலூர் மாநகராட்சியில் துாய்மை பணியாளராக பணிபுரிந்து 25.08.1999—ல் பணியிடை காலமான திரு.குமார், த/பெ.பென்சில் அவர்களின் வாரிசுதாரரான மனைவி திருமதி.லட்சுமி க/பெ.குமார் என்பவர் குடும்ப ஓய்வூதியம் பெற்று வந்த நிலையில் 27.08.2001 ல் காலமானார். அன்னாருடைய வாரிசுதாரர்களான திருமதி.ஆஷா, (மகள்) திரு.பிரசாத் (மகன்) திரு.பிரபாகரன் (மகன்) திரு.அஜித்குமார் (மகன்) என்பவர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் அளிக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, சென்னை—35 க்கு அனுப்பி வைக்கப்பபட்டது.<br><br>உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை கடித எண் 17920/ந.ஒ.ச. (4) 2021 நாள் 28.01.2022 கடிதத்தில் அன்னாரின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டதில், அவருடைய மகள் திருமதி.ஆஷா என்பவருக்கு 28.01.2001 முதல் |

| | |
|---|---|
| | 30.09.2004 வரையிலான காலத்திற்கு குடும்ப ஓய்வூதியம் கடலூர் மாநகராட்சியில் வழங்கப்பட வேண்டும் என்றும், வழங்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் விபரத்தை உள்ளாட்சி நிதித்தணிக்கை துறைக்கு தெரிவிக்கப்பட்ட பின்னரே மற்ற வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் விடுவிக்கப்படும் என கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>மேற்படி கடிதப்படி, மகள் திருமதி.ஆஷா என்பவருக்கு 28.08.2001 முதல் 30.09.2004 வரை குடும்ப ஓய்வூதியம் கணக்கிடப்பட்டதில், ரூ.62,276/– வழங்கப்பட வேண்டியுள்ளது. இத்தொகையினை வருவாய் நிதிக் கணக்கில் இருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க. எண் 13658/ 2015/ பி2) |
| 30) | கடலூர் மாநகராட்சியில் 45 வார்டுகளுடன் 27.69 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பொதுசுகாதார பிரிவில் 11 துப்புரவு பணி கோட்டங்கள் அமைந்துள்ளது. இம்மாநகராட்சிக்கென பொதுசுகாதார பிரிவு அனுமதிக்கப்பட்ட11 ஓட்டுநர் பணியிடங்களில் ஓய்வு பெற்றவர்கள் மற்றும் பணியிடையே காலமானவர்கள் காரணமாக காலியிடங்கள் ஏற்பட்டு தற்பொழுது 09 ஓட்டுநர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். மேலும் இம்மாநகராட்சியானது மாவட்ட தலைநகரமாகவும், துறைமுக நகராகவும் தற்போது மக்கள் தொகையானது 1,98,987 ஆக அதிகரித்துள்ளது. இம்மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்திட குண்டு சாலை, வசந்தராயன்பாளையம், பாபு கலையரங்கம் ஆகிய மூன்று நுண்உர மையங்களும், குப்பைகள் உருவாகும் இடத்திலேயே உரம் தயாரிப்பதற்காக onsite compost 10 இடங்களிலும் அமைக்கப்பட்டு மக்கும் குப்பை, மக்காத குப்பை சேர்த்து தினசரி 33டன் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இவற்றில் 16 டன் மக்கும் குப்பைகளை கொண்டு இயற்கை உரம் தயாரிக்கப்பட்டும், பிளாஸ்டிக் கழிவுகள் தனியாக தரம் பிரிக்கப்பட்டு சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் அனுமதிக்கப்பட்ட ஓட்டுநர் பணியிடங்கள் 11ல் இரண்டு ஓட்டுநர் பணியிடங்கள் காலியாக உள்ளதால் கடலூர் மாநகராட்சி பகுதியில் அன்றாடம் தூய்மை பணிகள் மூலம் சேரும் குப்பைகளை அகற்றுவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது.<br><br>கடலூர் பெருநகராட்சியானது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில், நகரம் வளர்ச்சியடைந்து வரும் நிலையில், மக்கள் தொகை அதிகரித்து வருவதன் காரணமாகவும், திடக்கழிவு மேலாண்மை பணிகளை முழுமையாக செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே தற்போது உள்ள தூய்மை பணியாளர்களில் தகுதியானவர்களை கொண்டு காலியாக உள்ள 02 ஓட்டுநர் பணியிடங்களை நிரப்பிக்கொள்ள உரிய அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம் (கோப்பு எண். 6527/2019/எச்1) |

**31)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு. ந.க.எண்19089/2021/E2 நாள் 25.03.2022 ன்படி மூலதன மானிய திட்டநிதி 2021–22ன் கீழ் கடலூர் மாநகராட்சிக்கு கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 32, கரையேரவிட்டக்குப்பம் பகுதியில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி. | ரூ. 250.00 இலட்சம் |
| 2 | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 29 அண்ணாமலை நகர் பகுதியில் பூங்கா அமைக்கும் பணி. | ரூ.48.85 இலட்சம். |

மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கவும், தொழில்நுட்ப அனுமதி வழங்ககோரி தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம்

**32)** கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட கம்மியம்பேட்டை பகுதிகளில் வீடற்றவர்களுக்கு தங்கும் விடுதி கட்டிடம் கட்டும் பணி ரூ.110.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, மேற்கண்ட பகுதியில் மண் பரிசோதனை செய்ய வேண்டியுள்ளது. அதற்கான கட்டணம் ரூ. 42,480/– செலுத்த Ashhirwaad Analytical Laboratory, Chennai நிறுவனத்தினரால் தெரிவிக்கப்பட்டது. பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி தொகை ரூ. 42,480/– வருவாய் நிதியில், மாநகர் மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம்

**33)** கடலூர் மாநகராட்சி மாமன்ற கூட்டத்திற்கான மன்றப்பொருள், அலுவலக ஆணைகள் மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் கடிதங்கள், அரசாணைகள் ஆகியவை நகல் எடுக்க மேயர் அலுவலத்திற்கு மற்றும் பொறியியல் பிரிவிற்கு Xerox machine – 2 எண்ணிக்கை வாங்கும் பணி ரூ. 3.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாகஅனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 20.04.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுவிகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | M/s. Sri Vishnu Ganapathy Enterprises, கடலூர். | 0.02% மதிப்பீட்டைவிடகுறைவு. |
| 2. | M/s. Manikandan Traders. Pudhucherry. | 0.09% மதிப்பீட்டைவிடஅதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட M/s. Sri Vishnu Ganapathy Enterprises, கடலூர். என்ற நிறுவனம் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.02%மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளனர். குறைந்த

தொகைக்கான ஒப்பந்தப்புள்ளிஅளித்துள்ள M/s. Sri Vishnu Ganapathy Enterprises, கடலூர். என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம்

**34)** கடலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் 2021–22ம் ஆண்டிற்கான கடலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடலூர் மாநகராட்சிக்கு பின்வரும் பணிகளை பரிந்துரை செய்யப்பட்டது .

| வ. எண் | பரிந்துரை செய்யப்பட்ட பணியின் விவரம் | மதிப்பீடு. (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கடலூர் மாநகராட்சி தேவனாம்பட்டினம் சுனாமி குடியிருப்புப் பகுதியில் பழுதடைந்த பாதாள சாக்கடை குழாய்களை ( UGSS Pipe line ) அமைத்தல் (120 மீ) | 14.00 |
| 2 | கடலூர் மாநகராட்சி சிங்காரத்தோப்பு பாலத்தின் மேல் குடிநீர் குழாய் அமைத்தல் (430 மீ) | 12.00 |
| 3 | கடலூர் மாநகராட்சி வார்டு–3 தௌலத் நகர் VSL நகரில் சிமெண்ட் சாலை அமைத்தல் (165 மீ) | 16.50 |
| 4 | கடலூர் மாநகராட்சி வார்டு – 3 சண்முகம் தெரு குறுக்குத் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் (97 மீ) | 4.50 |
| | **மொத்தம்** | 47.00 |

மேற்படி பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் அவர்களின் செயல்முறை உத்திரவு. ந.க.எண் அ2/5534/2021 நாள் 26.04.2022ல் நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகர் மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம்

**35)** கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கான கடற்கரையோர கட்டுப்பாட்டு மண்டலத்திற்கு அனுமதி ( CRZ Clearance ) வழங்குவதற்கு, Member Secretary, TNSCZMA & Director of Environment,அலுவலக கடிதம் R,C,No P1/1900/2021 நாள் 09.03.2022. ன்படி ரூ. 2.00 இலட்சம் செலுத்த தெரிவிக்கப்பட்டது. பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி தொகை ரூ. 2.00 இலட்சம் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் திட்ட நிதியில், மாநகர் மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம்

**36)** கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 22 பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் தாய்மார்கள் பாலூட்டும் அறை மிகவும் பழுதடைந்துள்ளது. கதவுகள், தரையில் போடப்பட்டுள்ள டைல்ஸ், சுவற்றில் உள்ள டைல்ஸ் மற்றும் இருக்கைகள்

| | |
|---|---|
| | சேதமடைந்துள்ளது. மேற்படி பழுதுகள் நீக்கும் பணி ரூ. 6.60 இலட்சம் மதிப்பீட்டில் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகர் மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம் |
| 37) | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு. ந.க.எண்20800/2021/UPA1-1 நாள் 29.03.2022 ன்படி கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட கம்மியம்பேட்டை பகுதியில் வீடற்றவர்களுக்கு தங்கும் விடுதி கட்டிடம் கட்டும் பணி ரூ. 110.00 இலட்சம் மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள அனுமதியும், நிர்வாக அனுமதி வழங்ககோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம் |
| 38) | கடலூர் மாநகராட்சி மாமன்ற கூட்டத்திற்கான மன்றப்பொருள், அலுவலக ஆணைகள் மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் கடிதங்கள், அரசாணைகள் ஆகியவை நகல் எடுக்க மேயர் அலுவலத்திற்கு மற்றும் பொறியியல் பிரிவிற்கு Xerox machine – 2 எண்ணிக்கை வாங்கும் பணி ரூ. 3.10 இலட்சம் ( Gem rate ) மதிப்பீட்டில் பொது நிதியில் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகர் மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம் |
| 39) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 37 பழைய சுனாமி குடியிருப்பு பகுதியில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியின் படிக்கட்டுகள் பழுதடைந்துள்ளது. மேற்படி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் புதிதாக இரும்பினால் ஆன ms ladder அமைக்கும் பணி ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகர் மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 40) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிக்கான சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம் தயார் செய்ய சுற்றுச்சூழல் பொறியாளர் நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 1055/2018/தி1 நாள் 30.03.2021ல் அனுமதியளித்தற்கிணங்க மாத ஊதியம் ரூ.25,000/– (இருபத்தைந்தாயிரம் மட்டும்) ல் கீழ்க்கண்ட நிபந்தணைகளுக்குட்பட்டு Wasmanpro Environmental Solutions LLP, Chennai. நிறுவனம் மூலம் மூன்று மாதங்களுக்கு நியமித்துக்கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ. 75,000/- (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகர் மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலைஉத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

**நிபந்தனைகள்**

1. **Scope of work**

   The Scope work cover the following

   1. Conducting the site visit for package I and Package II area-Nellikuppam Road/Keshavan Thotam Road, Puthu Kuppam Road/Rathna Nagar, Bharathi Road, /Beach Road / Nellikuppam Road / Nellikuppam Road / Vanniarpalayam Road / RP Nagar
   2. Fixing the Sampling Locations
   3. Evaluation of report of analysis and suggesting the recommend solutions
   4. Documentations and Preparation of Environmental Monitoring Plan (EMP)
   5. Conducting the Compliance Status with national /State/Local Statutory environmental requirements.
   6. Conducting the Training programs/ Awareness to the work in the field for site staff and Contractors.
      - Induction
      - Toolbox Talks
      - OHS, E & S. Flagmen training
      - Gender Sensitization
      - HIV/AIDS Awareness
   7. Monitoring the Health Camps for labourers conducted by the contract.
   8. Suggesting the Environmental Measures which involves activities of Utility relocation. Traffic arrangements, Safety aspects and Storage of Construction materials
   9. Suggesting the protection of environment and sensitive receptors (residential areas, School, hospitals) which involves Air Environment, water environment, Noise environment, Tree cutting, Soil/Land/Water Management, Archeaological Property , if any (provide details and discuss measures taken) and Environmental Monitoring (to compare with pre project parameters
